செய்தி வெளியீடு எண்.923 நாள்.30.10.2008

## செய்தி வெளியீடு – 30.10.2008
## மூன்றாம் முறையாக உலக சதுரங்க சாம்பியன் பட்டம் வென்ற தமிழக வீரர் திரு. விசுவநாதன் ஆனந்த் அவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் பாராட்டு

**தமிழகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற சதுரங்க விளையாட்டு வீரர் திரு. விசுவநாதன் ஆனந்த் அவர்கள் 2000 ஆண்டில் ஈரான் தலைநகர் டெக்ரானில் நடைபெற்ற உலக அளவிலான சதுரங்கப் போட்டியில் வென்று உலக சாம்பியன் பட்டத்தை முதன் முதலாகப் பெற்றார்.**

**2007 ஆம் ஆண்டில் மெக்சிகோவில் நடைபெற்ற உலக சதுரங்க விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக உலக சதுரங்கச் சாம்பியன் பட்டத்தை வென்றார்.**

**அவற்றைத் தொடர்ந்து தற்பொழுது ஜெர்மன் நாட்டின் பான் நகரில் நடைபெற்ற உலக சதுரங்க சாம்பியன் போட்டியில் ரஷ்ய வீரர் விளாடிமீர் கிராம்னிக் என்வருடன் விளையாடி வெற்றி பெற்று திரு. ஆனந்த் அவர்கள் மூன்றாவது முறையாக உலக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். இதன் மூலம் இந்தியத் திருநாட்டிற்கும், தமிழகத்திற்கும் உலக அரங்கில் மீண்டும் பெருமை தேடித் தந்துள்ள திரு. விசுவநாதன் ஆனந்த் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.**

• * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.